<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,</u>

<u>இலுப்பூர்</u>

**முன்னிலை: திருமதி. சாதத்துணிஷா, பி.ஏ. பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

2026ம் ஆண்டு ஜீலை திங்கள் 16 ம் நாள் வியாழக் கிழமை

**<u>MC No. 01/2026</u>**

1.ராஜேஸ்வரி,
க/பெ.முருகேசன்

2.சுவேதா (மைனர்)
த/பெ.முருகேசன் ..... மனுதாரர்கள்

... எதிர் ...

முருகேசன்
த/பெ. பெருமாள் கோனார் ..... எதிர்மனுதாரர்

இம்மனுவானது என் முன்பாக 06.07.2026–ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி.R.உஷாராணி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

<u>உத்தரவு</u>

இம்மனுவானது மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் வாழ்க்கை பொருளுதவி வழங்க வேண்டி பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 144 –ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

மனுதாரர், எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வமான மனைவி ஆவார் என்றும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இரு தரப்பு பெற்றோர்களால் திருமணம் பேசி பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நிச்சயிக்கப்பட்டு, கடந்த 11.09.2011ம் தேதியன்று இந்து மத சம்பிர்தாயப்படியும், பாரம்பரியப்படியும், R.L.S ராஜா திருமண மஹால் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்திற்கு மனுதாரர் தாயார் வீட்டிலிருந்து மனுதாரருக்கு 17 பவுன் தங்க நகையும், எதிர்மனுதாரருக்கு 3 பவுன் மற்றும் சீர்வரிசையாக வீட்டிற்கு தேவையான பண்டபாத்திரங்கள் கொடுத்து திருமணம் செய்து வைத்தனர் என்றும், வாகனத்திற்கு பதிலாக ரூ.75,000/– ரொக்கப்பணமாக கொடுத்து பண்ட பாத்திரங்கள் சீர்வரிசையாக கொடுத்துள்ளனர் என்றும், திருமணத்திற்கு பிறகு மனுதாரரும், எதிர்மனுதாரரும் சந்தோசமாக குடும்பம் நடத்தி வந்தனர் என்றும், மனுதாரர், எதிர்மனுதாரருக்கு 2ம் மனுதாரர் சுவேதா 14 வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளார் என்றும், 2ம் மனுதாரருக்கு 2 வயதாகும் போது பானுப்பிரியா என்பவரை எதிர்மனுதாரர் 2ம் திருமணம் செய்துக் கொண்டார் என்றும், அன்றைய தினம் முதல் சுமார் 12 வருடங்களாக எதிர்மனுதாரர் 1,2 எதிர்மனுதாரர்கள் பராமரிக்கவில்லை என்றும், அவர் தனது இரண்டாவது மனைவியுடன் சென்றுவிட்டார் என்றும், 1ம் மனுதாரர் மிகுந்த சிரமத்துடன் தனது கை குழந்தையுடன் கிடைக்கும் விவசாய கூலி வேலைக்கு சென்று படிக்கவைத்துக் கொண்டு வாழ்ந்து வருகிறார் என்றும், 2ம் மனுதாரர் பூப்பெற்துததல் விழா செய்யும் போது கூட அவர் கலந்து கொள்ளவில்லை என்றும், இதுநாள் வரை தகப்பன் என்ற முறையில் ஒரு ஆடை, ஆபரணமோ 2ம் மனுதாரருக்கு படிப்பு செலவினங்களை கூட எதிர்மனுதாரர் செய்வதில்லை என்றும், 1ம் மனுதாரரை எதிர்மனுதாரர் அவமானப்படுத்துவதும், வாய்ச்சொற்களால் துன்புறுத்துவதும் அன்றாட வழக்கமாக இருந்தது என்றும், இதனால் மனுதாரருக்கு மிகுந்த தன

உளைச்சல் ஏற்பட்டு, ஊர் முக்கியஸ்தர்களை அழைத்து சமாதானம் பேசியபோது 2ம் மனுதாரரின் படிப்பிற்காவது ஏதாவது செய்யுங்கள் என கூறியுதற்கு எதிர்மனுதாரரும் அவரின் 2வது மனைவியும், சேர்ந்து மனுதாரரை தகாத வார்த்தைகளால் திட்டி, அடித்து துன்புறுத்தி வருகின்றனர் என்றும், 1ம் மனுதாரர் குடும்பச் செலவை விவசாய கூலிவேலைகள் மூலம் செய்துவந்தார் என்றும், சாப்பாட்டிற்கு மிகவும் கஷ்டமாக இருந்ததால் எதிர்மனுதாரருக்கு சொந்தமான சுமார் 5 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது என்றும், அதில் எதிர்மனுதாரர் விவசாயம் செய்து 100 மூட்டை நெல் விவசாயம் செய்து வருகிறார் என்றும், உணவிற்காக நெல் கேட்டால் உன் அப்பன் வீட்டில் வாங்கி சாப்பிடு என அநாகரிகமாக பேசுகிறார் என்றும், உணவிற்கு கூட நெல் கொடுக்க மறுத்து வருகிறார் என்றும், லாரி, டிப்பர், கம்ப்ரசர் மற்றும் மலையடி வைத்தும் அதன் மூலம் மாதம் 2,00,000 மேல் சம்பாதித்து வருகிறார் என்றும், 1,2 மனுதாரர்களை பராமரிக்காமல் 2வது மனைவி மற்றும் குழந்தைகளுடன் வாழ்ந்துவருகிறார் என்றும், எதிர்மனுதாரர் தனது சட்டப்பூர்வ மனைவியாகிய மனுதாரருக்கும், அவரின் மகளான 2ம் மனுதாரருக்கும், தேவையான அடிப்படை வசதிகளான உணவு, உடை, இருப்பிட வசதி, மருத்துவ செலவு மற்றும் இதர செலவுகளுக்கு எந்த ஒரு தொகையும் தருவதில்லை என்றும், எதிர்மனுதாரர் தனது சட்டப்பூர்வ மனைவியாகிய 1ம் மனுதாரருக்கும், 2ம் மனுதாரருக்கும் தேவையான அடிப்படை வசதிகளுக்கு வாழ்க்கை பொருளுதவி வழங்க கடமைப்பட்டவராகிறார் என்றும், ஆகையால் 1ம் மனுதாரரின் சட்டப்பூர்வ கணவராகிய எதிர்மனுதாரர், 2ம் மனுதாரரின் சட்டப்பூர்வ தந்தையாகிய எதிர்மனுதாரர் 1,2 மனுதாரர்களின் அடிப்படை வசதிகளான உணவு, உடை, இருப்பிட வசதி, மருத்துவ செலவு மற்றும் பிற செலவுகள் ஆகியவற்றிற்கு மாதம் ஒன்றுக்கு 1ம் மனுதாரருக்கு ரூ.15,000, 2ம் மனுதாரருக்கு ரூ.20,000ம் மொத்தம் ரூ.35,000/- எதிர்மனுதாரர் வாழ்க்கை பொருளுதவியாக வழங்க உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

2) இந்த வழக்கில் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரர் தரப்பு வழக்கு சாட்சி மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று தீர்மானிக்க வேண்டியுள்ளது. மனுவில் உள்ள சங்கதிகளை நிரூபிக்கும் பொருட்டு மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக் கொண்டு, கடந்த 11.09.2021ம் தேதியிட்ட திருமண பத்திரிக்கை அசல் ம.த.சா.ஆ 1 ஆகவும், 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ம.த.சா.ஆ 2 ஆகவும், 2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ம.த.சா.ஆ 3 ஆகவும், 2ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ம.த.சா.ஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தரப்பில் ம.தா.சா 2 ஆக ரெங்கசாமி என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

3) மேற்கண்ட, ம.த.சா.ஆ 1 ஆவணத்தின் மூலம் 1ம் மனுதாருக்கும், எதிர்மனுதாருக்கும் திருமணம் நடைபெற்றுள்ளது என்பதும், ம.த.சா.ஆ 4 ஆவணத்தின் மூலம் 2ம் மனுதாரர், 1ம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் குழந்தை என்பதும் தெரியவருகிறது. மேலும், மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர் ஒரு கணவர் என்ற அடிப்படையில், 1ம் மனுதாரரையும், தந்தை என்ற அடிப்படையில் 2ம் மனுதாரரரையும் பாதுகாக்கவும், பராமரிக்கவும் தவறி விட்டார் என்றும், மேலும் மனுதாரர்கள் இருவரையும் நிராகரித்து விட்டார் என்றும், மனுதாரர்கள் தங்களது அடிப்படை தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவம் போன்றவற்றை பூர்த்தி செய்துக் கொள்ள வழி இல்லாமல் கஷ்ட ஜீவணம் செய்து வருவதாகவும், கூறியுள்ள நிலையில் ,

எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுவுரை தாக்கல் செய்து, மேற்கண்ட சங்கதிகளை குறித்து மறுப்பு தெரிவிக்காமல் எதிர்மனுதாரர் தரப்பில் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார் என்பது தெரியவருகிறது.

4) மேலும், மனுதாரர் தரப்பு ஆவணங்கள் மூலம் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரின் சட்டப்படியான கணவர் என்பதும், 2ம் மனுதாரரின் தகப்பனார் என்பதும், நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

5) மேலும், மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் லாரி, டிப்பர், கம்ப்ரசர் மற்றும் மலையடி வைத்து அதன் மூலம் மாதம் 2,00,000 மேல் சம்பாதித்து வருகிறார் என கூறப்பட்டுள்ளள போதிலும், அதனைக் குறித்து நிரூபிக்கும் விதமாக மனுதாரர் தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்ப்படவில்லை என்பது தெரியவருகிறது. எனவே, 1ம் மனுதாரருக்கு ரூ.3000/–ம், 2ம் மனுதாரருக்கு ரூ.5000/–ம், மொத்தம் ரூ.8000/–வாழ்க்கை பொருளுதவியாக வழங்குவது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

எதிர்மனுதாரர், 1ம் மனுதாரருக்கு ரூ.3000/–ம், 2ம் மனுதாரருக்கு ரூ.5000/–ம் மொத்தம் ரூ.8000/– மாதாந்திர ஜீவனாம்சமாக இவ்வழக்கு தாக்கல் செய்த நாளில் இருந்து வழங்க வேண்டும் என்றும், மேலும் ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் 5 தேதிக்குள் வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால்

சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜீலை திங்கள் 16–ம் நாள் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

M SATHATHUNISHA Digitally signed by M SATHATHUNISHA Date: 2026.07.16 15:46:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>**

ம.த.சா.1 –ராஜேஸ்வரி

ம.த.சா.2.–ரெங்கசாமி

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| ம.த.சா.ஆ.1 | 11.09.2021 | திருமண பத்திரிக்கை அசல் |
| ம.த.சா.ஆ.2 | – | 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| ம.த.சா.ஆ.3 | – | 2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| ம.த.சா.ஆ.4 | – | 2ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை**

M SATHATHUNISHA Digitally signed by M SATHATHUNISHA Date: 2026.07.16 15:46:15 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.